# அறந்தாங்கி நகராட்சி
# நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்
## ஸ்ரீ விகாரி வருடம் கார்த்திகை மாதம் 2–ஆம் நாள் நவம்பர் மாதம் 18.11.2019ம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர் –2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 68<br>**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் –2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 69<br>**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 3** | அறந்தாங்கி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ள வாகனங்களை இயக்கவும் கலவை உரக்கிடங்கில் காவல் பணிகள் மேற்கொள்ள 1 ஜே.சி.பி. ஓட்டுநர், 3 ஓட்டுநர்கள் மற்றும் 3 காவலர்களை நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு 01.12.2019 முதல் 28.02.2019 வரை ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.10.00லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:–** 70<br>**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 4</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி எல்லைப் பகுதிகளில் தற்போது மழை காலமாக இருப்பதால் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 76 பணியாளர்களை நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு 01.12.2019 முதல் 28.02.2020 வரை ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 71<br><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 5</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு பொது கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆணையர் குடியிறுப்பில் கூடுதல் பணிகள் மேற்கொள்ள 04.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு. டி.மெய்ஞானம்,<br>ஒப்பந்ததாரர், அறந்தாங்கி</td><td>0.37 % அதிகம்</td></tr>
<tr><td>2)</td><td>திருமதி.கே. தேன்மொழி,<br>ஒப்பந்ததாரர், அறந்தாங்கி</td><td>0.05 % குறைவு</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண்:–</u> 72<br><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு திருமதி.கே. தேன்மொழி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 6</u></td>
<td>

அறந்தாங்கி நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP 2019-2020) கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 17349/E3/2019 நாள்.16.10.2019 ன்படி ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் –1 தார் சாலை அமைத்திட அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள 14.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற முன்று ஒப்பந்தப்புள்ளிகள் Off line லும் ஒரு ஒப்பந்தப்புள்ளி On line லும் வரப்பெற்றன அவற்றின் தொழிற்நுட்ப உறையினை திறந்து கூர்ந்தாய்வு செய்ததில் கீழ்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தகுதிகளை கொண்டுள்ளதனை அடுத்து 18.11.2019 அன்று விலை விபர உறையினை திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பிஎல்ஆர் & கோ, ஒப்பந்ததாரர் | 8.05 % அதிகம் |
| 2) | திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் | 6.35 % அதிகம் |

</td>
<td>

<u>தீர்மான எண்:–</u> 73

<u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (6.35 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேற்படி கூடுதல் விலைப்புள்ளியினை குறைத்து தர கோரியதில் 4.94 சதவீதமாக குறைத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br><br>2. மேற்படி பணிக்கு திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.94 சதவிகிதம் அதிகமாக உள்ளதனை ஏற்கலாம்.<br><br>3. மேற்படி பணி திட்டபணியாதலால் மறுஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதமாதம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்க்கவும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் மேற்படி கூடுதல் சதவீதம் நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் அதனை ஏற்கலாம்.<br><br>4. மேலும் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3134/2019/இ1) | |

| பொருள் எண். 7 | | தீர்மான எண்:– 74 |
|---|---|---|

**பொருள் எண். 7**

அறந்தாங்கி நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP 2019-2020) கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 17349/E3/2019 நாள்.16.10.2019 ன்படி ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் –2 தார் சாலை அமைத்திட அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள 14.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற முன்று ஒப்பந்தப்புள்ளிகள் Off line லும் இரண்டு ஒப்பந்தப்புள்ளி On line லும் வரப்பெற்றன அவற்றின் தொழிற்நுட்ப உறையினை திறந்து கூர்ந்தாய்வு செய்ததில் கீழ்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தகுதிகளை கொண்டுள்ளதனை அடுத்து 18.11.2019 அன்று விலை விபர உறையினை திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பிஎல்ஆர் & கோ, ஒப்பந்ததாரர் | 9.14 % அதிகம் |
| 2) | திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் | 5.83 % அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (5.83 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேற்படி கூடுதல் விலைப்புள்ளியினை குறைத்து தர கோரியதில் 4.94 சதவீதமாக குறைத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:–** 74

**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கு திரு.கே.கலைமணி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.94 சதவிகிதம் அதிகமாக உள்ளதனை ஏற்கலாம்.<br>3. மேற்படி பணி திட்டபணியாதலால் மறுஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதமாதம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்க்கவும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் மேற்படி கூடுதல் சதவீதம் நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் அதனை ஏற்கலாம்.<br>4. மேலும் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3134/2019/இ1) | |

ஒம்/-இரா.வினோத்
தனி அலுவலர்
அறந்தாங்கி நகராட்சி